1973 ஆகஸ்ட் 11]

திருவாவடுதுறை ஆதீனத்தின் கீழுள்ள நிலங்கள்

* 97 வினு—திரு. ச. சங்குமுத்து தேவர். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, கோடாரங்குளம் இனும் கிராமத்தில், திருவாவடுதுறை ஆதீனம் மேற்பார்வையில் உள்ள மொத்த நஞ்சை, புஞ்சை நிலங்கள் எவ்வளவு?

(இ) ஆதினகர்த்தர், பயிரிடும் விவசாயிகளுக்கு அடையோலை போட்டுக் கொடுத்தது எத்தனை ஏக்கர்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) நஞ்சை நிலங்கள் மொத்தம் 256 ஏக்கர் 33 சென்டு.

புஞ்சை நிலங்கள் மொத்தம் 274 ஏக்கர் 99 சென்டு.

(இ) எல்லா நஞ்சை நிலங்களையும், சாகுபடிக்கு ஏற்ற புஞ்சை நிலங்களையும் தமிழ்நாடு பொறுப்பாவணங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தும்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்ட எண் 57/61) குத்தகைப் பத்திரங்கள் மூலம் சாகுபடிதாரர்களுக்கு விடப்பட்டுள்ளன.

திருப்புடைமருதூர் கோயில் நிதி

* 98 வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் கிராமத்திலுள்ள கோயில் நிதியிலிருந்து அங்கு ஒரு வைத்தியசாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, இந்தக் கிராமத்தில் கிட்டத்தட்ட ஐந்து மைல் சுற்று வட்டாரத்தில் எந்த வைத்திய வசதியும் இல்லை. அங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத்தைச் செய்பவர்கள். எனவே, அந்தக் கோயிலின் நிதியிலிருந்து வைத்தியசாலை அமைப்பதற்கு அரசு மறுபரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அங்கு சித்த வைத்திய மருத்துவ மனையை ஏற்படுத்த அந்தக் கோயிலின் நிதிநிலையைப்

பற்றி மதுரை துணை ஆணையரிடமிருந்து விவரம் கேட்கப்பட்டுள்ளது. கோயிலின் நிதி போதுமானதாக இருந்தால் எதிர்காலத்திலே அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

நூல்களை வெளியிட உதவி

* 74 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எழுத்தாளர்களின் நூல்களை அரசே தனி அமைப்பின் மூலம் ஆராய்ந்து தரமான நூல்களை அச்சிடுவதற்கும் விற்பனை செய்வதற்கும் தனித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிடுவதற்குத் தமிழ் வளர்ச்சி இயக்குநர், அரசின் சார்பில், நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, எழுத்தாளர்களே நிறைந்திருக்கும் இந்த அமைச்சரவையின் காலத்திலாவது Southern Language Book Trust போன்ற அமைப்பை உருவாக்கி நல்ல கட்டுரை நூல்களை, கவிதை நூல்களை எழுதும் எழுத்தாளர்களின் எழுத்துக்களையெல்லாம் சேகரித்து, அரசே அவற்றை வெளியிட, தனி நிறுவனத்தை ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட யோசனை இப்பொழுது இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, தரமான எழுத்தைப் பற்றியும், தரமான புத்தகங்களைப்பற்றியும் கேள்வி கேட்டார்கள். ஆனால், இன்றைக்குக் குடும்பப் பத்திரிகை என்று சொல்லக்கூடிய பல பத்திரிகைகளில் ஆபாசமான படங்களையும், ஆபாசமான கதைகளையும் எழுதுகின்றார்கள். நான் செக்ஸைப்பற்றிச் சொல்லவில்லை. கம்பனும், வள்ளுவனும் சொல்லாத செக்ஸைப்பற்றி இவர்கள் சொல்லப் போவதில்லை. ஆனால், ஒழுக்கக்கேடான பல நூல்களை எழுதுகிறார்கள். அவைகளையும் தடை செய்யுமா என்று கேட்டுக்கொண்டு, தலைவரவர்களே, உங்கள் மூலம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சில புத்தகங்களைப் படித்திருக்க மாட்டார்கள். சில புத்தகங்கள் பிரச்சினைகளைப் பார்த்துப் போடாமல், *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.